**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No.251/2025 PW.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | தியாகராஜன் | த–பெ /க.பெ. | மெய்யப்பன் |
| ஊர்: | : | நாச்சியாபுரம் | சமயம்: | |
| வயது: | : | 64/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | விவசாயம் | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.05.2026**

----------------------------------------------------------------------------------------------------

**22.05.2026**

**முதல் விசாரணை:**

**1)** நான் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவேன். நான் எனது தரப்பு சாட்சியத்தை நிரூபணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் இருப்பது எனது கையொப்பம் தான். கீழ்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன்.

கடந்த 29.09.2025 ம் தேதியிட்ட தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி சென்னை, ஐயப்பாக்கம் கிளை **காசோலை (காசோலை எண்189963) அசல் ம.சா.ஆ.1 ஆகும்.** கடந்த 01.10.2025 ல் போதிய தொகை இல்லை என்ற காரணம் கண்டு **திருப்பப்பட்ட ரிட்டன் மெமோ அ.சா.ஆ.2 ஆகும்.** கடந்த 08.10.2025 ல் போதிய தொகை இல்லை என்ற காரணம் கண்டு **திருப்பப்பட்ட ரிட்டன் மெமோ அ.சா.ஆ.3 ஆகும்.** கடந்த 16.10.2025 அன்று இது சம்பந்தமாக எதிரிக்கு அனுப்பப்பட்ட **சட்ட அறிவிப்பு அலுவலக நகல் அஞ்சலக ரசீதுடன் ம.சா.ஆ.4 ஆகும்.** கடந்த 16.10.2025 தேதி சட்ட அறிவிப்பு அனுப்பியதற்கான **அஞ்சலக ரசீது அசல் ம.சா.ஆ.5 ஆகும்.** கடந்த 17.10.2025

அன்று எதிரி வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் **ம.சாஆ.6 ஆகும்.** மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை – குறுக்கு விசாரணை –** எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் குறுக்கு விசாரணைக்கு காலம் கேட்டுக்கொண்டதால் ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

VALLIMANALAN S A

Digitally signed by VALLIMANALAN S A
Date: 2026.05.22 17:55:42 +0530

நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், காரைக்குடி.